செ.வெ.எண்: 75 நாள்.30.11.2017

திருநெல்வேலி மாநகராட்சியில் 383 நிரந்தர துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.3.20 லட்சம் மதிப்பிலான (Rain Court) ரயின் கோர்ட் மற்றும் கையுரை உள்ளிட்ட உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

----

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்தில் நிரந்தர துப்புரவு பணியாளர்களுக்கு ரயின் கோர்ட் மற்றும் கையுரை உள்ளிட்ட உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சி இன்று (30.11.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு 383 நிரந்தர துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.3.20 லட்சம் மதிப்பிலான (Rain Court) ரயின் கோர்ட் மற்றும் கையுரை உள்ளிட்ட உபகரணங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக டெங்கு ஒழிப்பு பணி மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுத்தம் செய்யும் பணிகளை மாநகராட்சி பணியாளர்கள் சிறப்புடன் செய்து வருகின்றனர். இப்பணிகள் ஈடுபட்டுள்ளவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இன்று 383 துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.3.20 லட்சம் மதிப்பிலான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அனைவரும் நல்ல முறையில் பணியாற்றி திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு பாதிப்பு இல்லாத வகையில் சிறப்பாக பணியாற்ற வேண்டும். மேலும் தூய்மையான மாவட்டமாக திகழும் வகையில் பணியாற்ற வேண்டும். என பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

புயலின் காரணமாக திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. தற்பொழுது மழையின் அளவு குறைந்து உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் மழையினால் சுமார் 50 மரங்கள் 200 மின்கம்பங்கள் 5 வீடுகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இவைகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைகிணங்க மழையினால் ஏற்பட்ட பாதிப்புகள் விரைந்து சரிசெய்யப்பட்டு வருகிறது. அனைத்து துறை அலுவலர்களும் இணைந்து செயல்படும் வகையில் குழுக்கள் தயார் நிலையில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 125 பாதிப்பிற்கு உள்ளாக கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்ட பகுதிகள் உள்ளன. மழையினால் பெரிய பாதிப்புகள் ஏதும் திருநெல்வேலி மாவட்டத்தில் இல்லை. இராதாபுரம், மூக்கூடல் பேரூராட்சி மையங்களில் உள்ள முகாம்களில் பாதுகாப்பு கருதி தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட அத்தியவாசி பொருட்கள் வழங்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு கண்காணிப்பு அலுவலராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்

பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை உடன் செய்து தரவுள்ளார்கள். என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், உதவி ஆணையர் திரு.வசந்தராஜன், மாநகர நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**